# பூலாவ் பத்து பூத்தே தீவு மீதான உரிமைப் போராட்டம் ஜொகூர் சுல்தான் கோபத்திற்கு காரணம் உண்டு

கோலாலம்பூர், அக். 16- சர்ச்சைக்குரிய பூலாவ் பத்து பூத்தே தீவு தொடர்பாக ஜொகூர் ஆட்சியாளர் சுல்தான் இப்ராஹிம் கோபப்படுவதற்கு சரியான காரணம் இருக்கிறது என்று பினாங்கு துணை முதல்வர் பேராசிரியர் டாக்டர் பி.ராமசாமி கூறுகிறார்.



இந்த விவகாரம் தொடர்பாக முன்னாள் பிரதமர் துன் டாக்டர் மகாதீர் முகமட் முழு விளக்கத்தையும் அளிக்க வேண்டும் என்றும் டாக்டர் ராமசாமி கேட்டுக் கொண்டார்.

ஜொகூருக்கு தெற்கே உள்ள அந்தத் தீவை மலேசியாவும் சிங்கப்பூரும் உரிமை கொண்டாடி வருகின்றன. இது தொடர்பாக அனைத்துலக நீதிமன்றத்திலும் வழக்கு நடைபெற்று வந்தது. அந்தத் தீவு சிங்கப்பூருக்கே சொந்தமானது என்று 2008ஆம் ஆண்டு அளித்த தீர்ப்பில் அனைத்துலக நீதிமன்றம் தெரிவித்தது.

இதனை எதிர்த்து தேசிய முன்னணி அரசாங்கம் மேல்முறையீடு செய்தது. இந்நிலையில் 2018 மே 9ஆம் தேதி நடைபெற்ற 14ஆவது பொதுத் தேர்தலில் நம்பிக்கைக் கூட்டணி அதிகாரத்தை கைப்பற்றியதும் மகாதீர் இரண்டாவது தடவையாக பொறுப்பேற்றார். அதன்பின்னர் அந்த தீவை உரிமை கோரும் போராட்டத்தை கைவிடுவதாக அவர் அறிவித்தார். இதற்கு சுல்தான் இப்ராஹிம் பலத்த கண்டனத்தை தெரிவித்தார்.


நம்பிக்கைக் கூட்டணி அரசாங்கம் ஏன் இந்த முடிவை எடுத்தது? அதற்கு என்ன காரணம். இதுகுறித்து இப்போதைய அரசாங்கம் விசாரணை நடத்த வேண்டும் என்றும் சுல்தான் கேட்டுக் கொண்டார்.

இதுகுறித்து கருத்துரைத்தபோது சுல்தான் இப்படி கோபப்படுவதற்கு சரியான காரணங்கள் இருக்கின்றன. அவரின் கேள்விக்கு பதிலளிக்க வேண்டியது மகாதீரின் கடமை என்றார் டாக்டர் ராமசாமி.

ஒரு காலத்தில் ஜொகூர் மாநிலத்தை ஜொகூர் சுல்தான் பரம்பரை ஆட்சி புரிந்துகொண் டிருந்த போது பூலாவ் பத்து பூத்தே தீவு ஜொகூரின் கட்டுப்பாட்டில் இருந்தது. பின்னர் 1924ஆம் ஆண்டு சிங்கப்பூர், மலாக்கா, பினாங்கு ஆகிய பகுதிகளை ஒன்றிணைந்த மலாய் கூட்டரசுப் பகுதிகளாக பிரகடனம் செய்தது பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சி.

அந்த சமயத்தில் ஜொகூரின் தன்னாட்சி உரிமையிலிருந்து பூலாவ் பத்து பூத்தே தீவை பிரித்து விட்டன. ஆனால் வரலாற்று பின்னணியை பார்த்தால் அந்தத் தீவு ஜொகூருக்குத்தான் சொந்தமானது. அது இப்போது கைமாறி போய் விட்டது. இது ஜொகூருக்கு மட்டுமல்ல. மலேசியாவுக்கே ஏற்பட்ட பேரிழப்பு என்றும் டாக்டர் ராமசாமி கூறினார்.

# கோவிட்-19 தொற்றை கண்காணிக்க மைசெஜாத்ரா செயலியில் ரோபோ கோல்




கோலாலம்பூர், அக்.16- மைசெஜாத்ரா செயலியின் வழி கோவிட்-19 நோய்த் தொற்று அறிகுறிகளை அவர்களுக்கு தெரிவிக் கும் நடைமுறை கொண்டு வரப்பட் டுள்ளது. ஒருவரின் நிலைமை மோசமானால் எஸ்எம்எஸ் எனப்படும் குறுந்தகவல் வழியும் ரோபோ கோல் எனப்படும் இயல்பான வேண்டுகோள் அறிவுறுத்தலும் அதில் வெளியிடப்படும் என சுகாதார தலைமை இயக்குநர் நூர் ஹிஷாம் அப்துல்லா கூறினார்.

இந்த ரோபோ கோல் குரல் பதிவை பெறுகின்றவர்கள் உடனடியாக மேல் பரிசோதனைக்கு அருகில் உள்ள சுகாதார மையத்தில் தங்களை உட்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் அவர். கடுமையான காய்ச்சல். மூச்சுத்திணறல், தொடர்ச்சியான களைப்பு, சோர்வு, அயற்சி மற்றும் இருதய வலி கொண்டவர்கள் இதனை அறிகுறிகளாகக் கொள்ள வேண்டும்.இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நிலையில் அவர்களுக்கு எச்சரிக்கை சமிக்ஞைகள் வரும். அதன்பிறகு ரோபோ கோல் எனப்படும் தானியங்கி குரல் பதிவு கேட்கும் என்றார் அவர்.

மைசெஜாத்ரா செயலியில் கேட்கப்படும் சுகாதார மதிப்பீட்டு கேள்விகளுக்கு இன்னும் பதில் அளிக்காதவர்களுக்கு கோவிட்-19 மதிப்பீட்டு மையத்திலிருந்து இந்த அழைப்பு வரும் என்றார் அவர்.

இதன்மூலம் உடனடியாக ஒருவரின் உடல்நிலையை கண்டறிந்து அவருக்கு சிகிச்சையளிக்கலாம் அல்லது மரணமடைந்த நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு வரப்படுவவோரின் எண்ணிக்கையை குறைக்கலாம் என்றார் அவர்.

கோவிட்-19 தொடர்பில் அரசாங்கம் மேற்கொண்டுள்ள அண்மைய புதிய நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று. மேலும் பல புதிய அம்சங்கள் விரைவில் அமல்படுத்தப்படும்.

# பண்டோரா பேப்பர்ஸ் விவகாரம்: நாடாளுமன்ற சிறப்புக்குழு கூட்டத்தில் விவாதம்

கோலாலம்பூர், அக்.16- ஊழல் மீதான நாடாளுமன்ற சிறப்புக்குழு நேற்று தனது முதலாவது கூட்டத்தில் பண்டோரா பேப்பர்ஸ் அம்பலமானது குறித்து விவாதித்ததாக அதன் தலைவர் டான்ஸ்ரீ ராயிஸ் யாத்திம் கூறினார்.எனினும் மேலவை யின் நிர்வாக உயர்நெறி ஊழல் தடுப்பு மீதான தேர்வுக் குழுவின் ஆய்வுக்கு அந்த விவகாரத்தை



அனுப்புவதா, இல்லையா என்பது பற்றி இன்னும் எந்தவொரு முடிவும் எடுக்கப்படவில்லை என்று அவர் தெரிவித்தார்.

12 ஆவது மலேசிய திட்டத்தை தாக்கல் செய்தபோது, ஊழல் தடுப்பு நடவடிக்கைகள் மீதான தம்முடைய நிலைப்பாட்டினை பிரதமர் டத்தோஸ்ரீ இஸ்மாயில் சப்ரி யாக்கோப் வலியுறுத்தியதை அந்த குழு சுட்டிக்காட்டியதாக ராயிஸ் குறிப்பிட்டார்.

சமீபத்தில் எழுப்பப்பட்ட பண்டோரா பேப்பர்ஸ் தொடர்பான விவகாரங்கள் குறித்தும் நேற்றைய கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக அவர் அறிக்கையொன்றில் தெரிவித்தார்.

இந்த பண்டோரா பேப்பர்ஸ் ஆவணங்களை புலனாய்வு பத்திரிகையாளர்களின் சர்வதேச கூட்டமைப்பு அக்டோபர் 3 ஆம் தேதி வெளியிட்டது.

இந்த ஆவணங்களில் துன் டாயிம் ஸைனுடின் உட்பட முக்கிய மலேசியர்களின் பெயர்களும் இடம்பெற்றிருந்தன.

# தடுப்பூசி தொடர்பான பொய்ச் செய்திகள் நடவடிக்கை எடுங்கள்


கோலாலம்பூர், அக். 16- கோவிட்-19 தடுப்பூசி தொடர்பாக பொய்ச் செய்திகளையும் வதந்திகளையும் பரப்புவோருக்கு எதிராக உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று சுகாதார அமைச்சர் கைரி ஜமாலுடின் கேட்டுக் கொண்டார்.

இதுதொடர்பாக நாங்கள் பலமுறை காவல்துறையில் புகார் செய்து விட்டோம். ஆனால் இன்னமும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை என்று அவர் கூறினார். இனியும் காலதாமதம் செய்யக்கூடாது. பொய்ச் செய்திகளையும் தடுப்பூசிக்கு எதிரான செய்திகளையும் வெளியிட்டுக் கொண்டிருப் பவர்களை கண்டுபிடித்து தண்டிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

இதுபோன்ற பொய்ச் செய்திகளை சமூக ஊடகங்களில் வெளியிட்டுக் கொண்டிருக்கின்ற வர்களுக்கு எதிராக காவல்துறை என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்று டாக்டர் சக்கினா என்பவர் தமது கீச்சகத்தில் கேள்வி எழுப்பினார்.

இதுகுறித்து கருத்துரைத்த போது காவல்துறையில் புகார் செய்தும் கூட சில கும்பல்கள் இதுபோன்ற பொய்ச் செய்திகளை பரப்பிக் கொண்டிருக்கின்றன. பொதுமக்கள் சுகாதாரத்திற்கு மிரட்டலாக இருக்கின்றனர் என்றார் கைரி. நாங்களும் காவல்துறையில் இதுபற்றி புகார் செய்திருக்கிறோம். விரைவில் விசாரணை தீவிரப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கிறோம் என்று அவர் கூறினார்.

# இட்ரிஸ் இஸ்மாயில் உரையாடல் பதிவு கசிவு: தொடர்பு பல்லூடக அமைச்சு விசாரணை



பெட்டாலிங் ஜெயா, அக். 16 - மலாக்கா முன்னாள் முதலமைச்சர் இட்ரிஸ் ஹரோனுக்கும் பிரதமருக்கும் இடையே நடைபெற்ற ஒரு தொலைபேசி உரையாடலின் ஆடியோ பதிவு கசிந்த விவகாரத்தை தொடர்பு, பல்லூடக அமைச்சு விசாரணை செய்யவுள்ளது.

அந்த ஒலிநாடா பதிவு சமூக ஊடகங்களில் வைரலாக பரவியது குறித்து ஏமாற்றம் தெரிவித்த துணையமைச்சர் ஸஹிடி ஸைனுல் அமிடின் தனிப்பட்ட உரையாடல்களை கசிய விடுவது இப்போது ஒரு பழக்கமாக மாறி வருவது பற்றி கவலை தெரிவித்தார்.

இதுபோன்ற விஷயங்கள் பல சந்தர்ப்பங்களில் நடந்துள்ளன. தனிப்பட்ட உரையாடல்களை பதிவு செய்யும் பொறுப்பற்ற நபர்களின் செயல்களை கண்டு நாம் ஏமாற்றமடைந்து வருகிறோம். இம்மாதிரியான சம்பவங்களை நாம் விசாரணை செய்ய வேண்டும் என்று அவர் அம்னோ உச்சமன்றக் கூட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

கடந்த காலத்தில் முன்னாள் பிரதமர் நஜீப் ரசாக், அம்னோ தலைவர் அகமட் ஜாஹிட் ஹமிடி, பிகேஆர் தலைவர் அன்வார் இப்ராஹிம் ஆகியோருடைய உரையாடல்கள் என கூறப்படும் ஒலிநாடா பதிவுகள் கசிந்துள்ளதை ஸஹிடி சுட்டிக்காட்டினார்.

இப்போது பிரதமருக்கு இது நிகழ்ந்துள்ளது. இது சங்கடமாகவும் வெட்கக் கேடாகவும் உள்ளது என்றார் அவர்.

# 2022 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் மருத்துவ பராமரிப்புக்கு கூடுதல் நிதி அவசியம்

கோலாலம்பூர், அக். 16- கோவிட்-19 பெருந்தொற்றுக்கு எதிரான முழுமையான போராட்டத்திற்கு நாட்டின் வரவு செலவுத் திட்டத்தில் அதிகமான நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட வேண்டும் என சுகாதார நிபுணர்கள் தெரிவித்தனர்.

குறைவான மனித ஆற்றல், இலக்கவியல் வசதிகளுக்கு குறைவான முக்கியத்துவம் போன்ற குறைபாடுகள் தீர்க்கப்பட வேண்டும். மற்றவர்களுக்கு பரவாத நோய்களுக்கான மருந்துகள், கோவிட்-19 கூடுதல் தடுப்பூசிகள் இப்படி பல பிரச்சினைகளை கவனிக்க அதிகமான நிதி அவசியம்.



வரும் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ஒட்டுமொத்த சுகாதார அமைப்புக்கு 20 விழுக்காடு வரை கூடுதல் நிதி ஒதுக்கீடு தர வேண்டும் என முன்னாள் சுகாதார துணை அமைச்சர் டாக்டர் லீ பூன் சை கேட்டுக்கொண்டார்.

தடுப்பூசிகள் வாங்குவதற்கும் சோதனை நடவடிக்கைகளுக் கும் நிர்வாக செலவினங் களுக்கும் இந்த நிதி ஒதுக்கீடு அவசியம் என்றுஅவர் கூறினார்.

கோவிட்-19 பெருந்தொற்றால் மக்களிடையே மனோநிலை பாதிப்பு அதிகரித்து வருகிறது. அதையும் கவனிக்க வேண்டும்.

சுகாதார பராமரிப்பு திட்டத்தில் அதிகமான இலக்கவியல் நடவடிக்கைளை மேம்படுத்த வேண்டும். மின்னியல் ரீதியில் மருத்துவ ஆவணங்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள் அதிகமாக வேண்டும் என்றார் அவர்.

கடந்த 22 மாதங்களில் ஓய்வில்லாமல் பாடுபட்ட மருத்துவப் முன்களப் பணியாளர்களை அரசாங்கம் பாராட்ட வேண்டும். போதுமான மருத்துவ ஊழியர்கள், தாதியர்கள், மருத்துவர்கள் , நிபுணர்கள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றார் அவர்.

# கோவிட்-19 தொற்றினால் மேலும் 7,420 பேர் பாதிப்பு

புத்ராஜெயா, அக். 16- நாட்டில் கடந்த 24 மணி நேரத்தில் கோவிட்-19 தொற்றினால் மேலும் 7,420 பேர் பாதிக்கப்பட்டனர் என்று சுகாதார அமைச்சரகம் தெரிவித்தது.

நேற்று முன்தினம் இந்த எண்ணிக்கை 8,084ஆக இருந்தது. நேற்று புதிதாக 7,420 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் நாட்டில் இதுவரை இந்தத் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 23 லட்சத்து 77 ஆயிரத்து 33 ஆக உயர்வு கண்டிருக்கிறது என்று சுகாதார தலைமை இயக்குநர் டான்ஸ்ரீ டாக்டர் நூர் ஹிஷாம் தெரிவித்தார்.

நேற்று சிலாங்கூரில்தான் அதிகமானோர் பாதிக்கப்பட்டனர். சிலாங்கூரில் 1,630, சரவாவில் 1,061, கிளந்தானில் 896, ஜொகூரில் 804, சபாவில் 691, பினாங்கில் 587, திரெங்கானுவில் 452 என புதிய பாதிப்பு சம்பவங்கள் பதிவாகின.

கெடாவில் 416, பேராவில் 409, கோலாலம்பூரில் 304, பகாங்கில் 289, மலாக்காவில் 255, நெகிரி செம்பிலானில் 184, பெர்லிஸில் 82, புத்ராஜெயாவில 24, லாபுவானில் 1 என புதிய சம்பவங்கள் பதிவாகின என்று நூர் ஹிஷாம் கூறினார்.



AG:08529/16/10/21